பாக 20, 25 கிராமங்கள் இருக்கிற காரணத்தாலே பொது மக்களுக்கு சேவை செய்ய முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை இருப்பதால், அந்த சேத்தூர் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அந்த மக்களுடைய நலன் கருதி அரசு அதற்கு உடனேயே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, பிரிப்பதோ சேர்ப்பதோ அதிலே மக்கள் தொகையை மட்டும் கணக்கு எடுத்துக் கொள்ள இயலாது. நிர்வாக வசதி இருக்க வேண்டும். நிதி வருவாய் போதிய அளவுக்கு அமைய வேண்டும். இப்படிப்பட்ட நிலைகளில் ஒத்து இருக்குமானால் அது பற்றி பரிசீலிக்கலாம்.

நெல் அரவை ஆலைகளில் சோதனை

*1641—திரு. கோ. பூவராகன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1988–89 ஆம் ஆண்டில் மணச்சநல்லூர் (திருச்சி மாவட்டம்) நெல் அரவை ஆலைகளில் திடீர் சோதனை போடப் பட்டதால் எவ்வளவு பதுக்கல் நெல் பிடிக்கப்பட்டது?

(ஆ) அதில் பறிமுதல் செய்யப்பட்டது எவ்வளவு?

(இ) திருப்பி கொடுக்கப்பட்டது எவ்வளவு?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மச்சணநல்லூர் நெல் அரவை ஆலைகளில் திடீர் சோதனையின்போது பதுக்கப்பட்டிருந்த 2700.74 குவிண்டால் நெல்லும் மற்றும் 131.29 குவிண்டால் அரிசியும் பிடிக்கப் பட்டது.

(ஆ) பிடிக்கப்பட்ட நெல் மற்றும் அரிசி தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற தடையாணை சில வழக்குகளில் அமலில் இருந்ததால், கைப்பற்றுதலின் பேரில் மேல் நடவடிக்கை எடுக்க இயலாமல் அதனால் பறிமுதல் செய்யப்படாமல் இருந்தது. இவ்வினங்களில் 13—7—1989 நாளிட்ட உயர்நீதிமன்றத்தின் ஆணையின்படி, மேல் நடவடிக்கை தொடரும்போது அரிசி ஆலை அதிபர்கள் மீண்டும் உயர்நீதிமன்றத்திலே வழக்குகள் தொடர்ந்தனர். தற்போது அதன்மீது அரசு தொடர்ந்துள்ள வழக்கில் 19–3–1990 அன்று அரசு சார்பாக தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது. எனவே மேல் நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப் படும்.

1990 மார்ச் 24]

(இ) பிடிக்கப்பட்ட நெல் மற்றும் அரிசி இருப்பிலிருந்து ஏதும் திருப்பி கொடுக்கப்படவில்லை.

9—30 மணி

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மணச்சநல்லூர் பகுதியிலே எத்தனை ஆலைகள் சோதனையிடப்பட்டது? அங்கே இருக்கும் எல்லா ஆலைகளும் சோதனையிடப்பட்டதா? இதற்கு மேலும் பக்கத்தில் இருக்கின்ற ஆலைகளிலே அந்த சமயத்திலே சோதனையிடப்பட்டது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்ததா? அவர்கள் ஏதோ வழக்கு மன்றத்திற்குச் சென்றதால் அவர்களை மட்டும் விட்டு விட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988–89 ஆம் ஆண்டுகளில் மணச்சநல்லூர் பகுதியிலே 20 ஆலைகளில் சோதனையிடப்பட்டது. 20 ஆலைகளிலும் தவறாக வைக்கப்பட்டு இருந்த நெல், அரிசி கைப்பற்றப்பட்டு இருக்கிறது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு கைப்பற்றப்பட்ட அரிசி அல்லது நெல் இவைகளை உடனடியாக அன்றையதினமே அவர்கள் பறிமுதல் செய்து இருந்தால் அல்லது இவ்வாறு அரசு கணக்கில் வைத்து இருந்தால் அவர்கள் கோர்ட்டுக்கு போவது நிறுத்தப்பட்டு இருக்கும். ஏதோ அவகாசம் கொடுத்து அவர்கள் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தியதால்தான் அவர்கள் கோர்ட்டுக்குப் போவது என்பது தெரிய வருகிறது. ஆகவே இனிமேலாவது, அந்த மாதிரி நடைமுறையை தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு சோதனையிடப்படும் போது பாதிக்கப்பட்டவர்கள் மேல் முறையீடு செய்வதற்கு சட்டப்படி, சுற்றறிக்கையின்படி அவர்களுக்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் அந்த மேல் முறையீடுகள் எல்லாம் முடிந்த பின்னால்தான் கைப்பற்றுவதற்கு உண்டான வாய்ப்பு சட்டப்படி ஏற்படும். அந்த முறைப்படி அதிகாரிகள் பின்பற்றி இவற்றைக் கைப்பற்றி இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு பூவராகன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நான் விளக்கம் அளிக்க விரும்புகிறேன். அந்த பதுக்கி வைக்கப்பட்டு இருந்த நெல், அரிசி இவற்றை கைப்பற்றுவதற்காக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தபோது அந்த ஆலைகளுக்கு சொந்தக்காரர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும், அவர்களால் தயாரிக்கப்பட்ட சிலரும்

சேர்ந்து கொண்டு அதிகாரிகளைத் தாக்குகின்ற வகையில் அங்கே ஒரு கிளர்ச்சி நடைபெற்ற காரணத்தால் உடனடியாக ஒரு பெரும் மோதுதலைத் தவிர்க்கவேண்டும் என்பதற்காக அவகாசம் அளிக்கப்பட்டது. அதற்கிடையில் நானும் திருச்சிக்கு சென்று இருந்தேன். அவர்களை எல்லாம் அழைத்து வைத்து நானும் அன்றைக்கு இருந்த உணவு அமைச்சரும் அவர்களிடத்திலே பேசியும் பார்த்தோம். ஆனால் அரசினுடைய நிபந்தனைகளுக்கு கட்டுப்பட மறுத்து பேசிக்கொண்டு இருக்கும்போதே நீதிமன்றத்திற்குச் சென்று விட்டார்கள். இதுதான் அப்போது நடந்தது.

காவிரியின் கடைமடைப் பகுதியில் வடிகால் வசதி

*765—திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காவிரியின் கடைமடைப் பகுதிகளில் வெள்ள நீர் சரியாக வடியாமல் பயிர் பாழாவதைத் தவிர்க்க அரசிடம் ஏதேனும் சிறப்புத் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, காவிரி நவீனப்படுத்தும் திட்டத்தில், ஆறு மற்றும் வாய்க்கால்களை மேம்படுத்துவதுடன் வடிகால்களை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் எல்லா வடிகால்களும் மேம்படுத்தப்பட உள்ளன. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் காவிரிகடைமடைப் பகுதிகளில் வெள்ள நீர் சரியாக வடியாமல் பயிர் பாழாவது தவிர்க்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும் போது 1971–72-ல் வெறும் 49.6 கோடி ரூபாய்க்கு ஒட்டுமொத்தமாக தயாரிக்கப்பட்ட அந்த திட்டம் இன்றைக்கு ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு எட்டி நிற்கிறது. 20 பங்கு அதிகமாகியிருக்கிறது. இன்றைக்கு உலக வங்கி கடன் பெறுவதற்கு இதற்கு முன்னால் மத்திய அரசும், மைசூர் அரசும் முட்டுக்கட்டையாக இருந்து அந்த திட்டம் தவிர்க்கப்பட்டு, இன்றைக்கு ஆயிரம் கோடி ரூபாயை தாண்டி இருக்கிறது. எனவே மத்திய அரசை அணுகி மைசூர் அரசை அணுகி உடனடியாக ஒப்புதல் பெற்று உலக வங்கி கடன் பெற்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.